©
தமிழ்நாடு அரசு
2018

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 0.80 பைசா

# தமிழ்நாடு அரசு அரசிதழ்

**அசாதாரணம்** **அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது**

எண். 27] சென்னை, திங்கள், ஜனவரி 23 , 2018
தை 10, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049
**பகுதி–II – பிரிவு 2**

## தலைமைச்செயலக துறைகளால் ஒரு பிரிவு பொதுமக்களின் நலனுக்காக வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் அல்லது ஆணைகள்

### அரசின் அறிவிக்கைகள்

### வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 –ன் கீழ் அறிவிக்கைகள்

*[அ.ஆ.நிலை எண். 7 வணிகவரிகள் மற்றும் பதிவு (ஆ1) 23 ஜனவரி 2018*
*தை 10, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2049]*

**எண். II(2)/வவப/79(எச்–1)/2018**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017,–ன் (தமிழ்நாடு சட்டம் 2017–ன் 19ல்) பிரிவு–128ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி ( இதன்பிறகு இந்த அறிக்கையில் கூறப்பட்ட சட்டம் என குறிப்பிடப்படும்) குழுவின் பரிந்துரைகளின் படி, தமிழ்நாடு ஆளுநரால், கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு– 47ன் கீழ் படிவம் ஜிஎஸ்டிஆர்–1ன் எந்த மாதத்திற்கான / காலாண்டிற்கான வெளிவழங்கல்கள் விவரங்களை உரிய தேதிக்குள் அளிக்கத் தவறியதற்காக எந்த பதிவு பெற்ற நபராலும் செலுத்தப்பட வேண்டிய தாமதக் கட்டணத் தொகை, அந்த தவறு தொடரும் காலத்திற்கு ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தைந்து ரூபாயக்கு கூடுதலான தொகை இதன் மூலம் கைவிடப்படுகிறது.

இருப்பினும், எந்த மாதத்தில் / காலாண்டில் வெளிவழங்கல்கள் இல்லையோ, கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு–47ன் கீழ் உரிய தேதியில் அந்த விவரங்களை அளிக்கத் தவறியதற்காக அந்த பதிவு பெற்ற நபரால் செலுத்தப்பட வேண்டிய தாமதக் கட்டணத் தொகை அந்தத் தவறு தொடரும் காலத்திற்கு ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபாய்க்கு கூடுதலான தொகை இதன் மூலம் கைவிடப்படுகிறது.

*[அ,ஆ,நிலை எண். 8 வணிகவரிகள் மற்றும் பதிவு (ஆ1) 23 ஜனவரி 2018*
*தை 10, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2049]*

**எண். II(2)/ வவப /79(எச்–2)/2018**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017–ன் (தமிழ்நாடு சட்டம் 2017–ன் 19ல்) பிரிவு–128ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி ( இனிமேல் இந்த அறிக்கையில் கூறப்பட்ட சட்டம் என குறிப்பிடப்படும்) குழுவின் பரிந்துரைகளின் படி தமிழ்நாடு ஆளுநரால் கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு–47ன் கீழ் உரிய தேதிக்குள் நமூனா படிவம் ஜிஎஸ்டிஆர்–5ல் அளிக்க தவறியதற்காக எந்த பதிவு பெற்ற நபராலும் செலுத்தப்பட வேண்டிய தாமத கட்டணத் தொகை அந்த தவறு தொடரும் காலத்திற்கு ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தைந்து ரூபாயக்கு கூடுதலான தொகை இதன் மூலம் கைவிடப்படுகிறது.

இருப்பினும், கூறப்பட்ட நமூனாவில் செலுத்தப்பட வேண்டிய மொத்த மாநில வரித் தொகை ஒன்றுமில்லை என்றால், கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு–47ன் கீழ் உரிய தேதியில் அந்த விவரங்களை அளிக்கத் தவறியதற்காக அந்த பதிவு பெற்ற நபரால் செலுத்தப்பட வேண்டிய தாமதக் கட்டணத் தொகை அந்தத் தவறு தொடரும் காலத்திற்கு ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபாய்க்கு கூடுதலான தொகை இதன் மூலம் கைவிடப்படுகிறது.

*[அ.ஆ.நிலை எண். 9 வணிகவரிகள் மற்றும் பதிவு (ஆ1) 23 ஜனவரி 2018*
*தை 10, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2049]*

**எண். II(2)/வவப/79(எச்–3)/2018**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017–ன் (தமிழ்நாடு சட்டம் 2017–ன் 19ல்) பிரிவு–128ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி ( இனிமேல் இந்த அறிக்கையில் கூறப்பட்ட சட்டம் என குறிப்பிடப்படும்) குழுவின் பரிந்துரைகளின் படி தமிழ்நாடு ஆளுநரால் கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு–47ன் கீழ் உரிய தேதிக்குள் நமூனா படிவம் ஜிஎஸ்டிஆர்–5ஏ–வில் அளிக்க தவறியதற்காக எந்த பதிவு பெற்ற நபராலும் செலுத்தப்பட வேண்டிய தாமத கட்டணத் தொகை அந்த தவறு தொடரும் காலத்திற்கு ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தைந்து ரூபாயக்கு கூடுதலான தொகை இதன் மூலம் கைவிடப்படுகிறது.

இருப்பினும், கூறப்பட்ட நமூனாவில் செலுத்தப்பட வேண்டிய மொத்த ஒருங்கிணைந்த வரித் தொகை ஒன்றுமில்லை என்றால், கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு–47ன் கீழ் உரிய தேதியில் அந்த விவரங்களை அளிக்கத் தவறியதற்காக அந்த பதிவு பெற்ற நபரால் செலுத்தப்பட வேண்டிய தாமதக் கட்டணத் தொகை அந்தத் தவறு தொடரும் காலத்திற்கு ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபாய்க்கு கூடுதலான தொகை இதன் மூலம் கைவிடப்படுகிறது.

*[அரசாணை எண். 10 வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1) 23 ஜனவரி 2018*
*தை 10, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2049]*

**எண். II(2)/ வவப /79(எச்–4)/2018**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017–ன் (தமிழ்நாடு சட்டம் 19/2017) பிரிவு–128ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி ( இனிமேல் இந்த அறிக்கையில் கூறப்பட்ட சட்டம் என குறிப்பிடப்படும்) குழுவின் பரிந்துரைகளின் படி தமிழ்நாடு ஆளுநரால் கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு–47ன் கீழ் உரிய தேதிக்குள் நமூனா படிவம் ஜிஎஸ்டிஆர் –6 ல் அளிக்க தவறியதற்காக எந்த பதிவு பெற்ற நபராலும்

செலுத்தப்பட வேண்டிய தாமத கட்டணத் தொகை அந்த தவறு தொடரும் காலத்திற்கு ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தைந்து ரூபாயக்கு கூடுதலான தொகை இதன் மூலம் கைவிடப்படுகிறது.

*[அ,ஆ,நிலை எண். 11 வணிகவரிகள் மற்றும் பதிவு (ஆ1) 23 ஜனவரி 2018*
*தை 10, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2049]*

**எண். II(2)/ வவப /79(எச்–5)/2018**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017–ன் (தமிழ்நாடு சட்டம் 2017–ன் 19ல்) பிரிவு – 146ல், ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017–ன் பிரிவு–20ல் படிக்கப் பட்டப்படி (மத்திய சட்டம் 2017–ன் 13ல்) அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி மற்றும் 2017 ஜுன் 28 தேதியிட்ட தமிழ் நாடு அரசிதழ் அசாதாரணத்தில் பிரிவு–2 பகுதி–II பக்கம்–1ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறையின் அறிவிக்கை எண். II(2)/ வவப /532/பி–2)2017–ஐ தள்ளி வைத்து, அத்தகைய தள்ளி வைப்புக்கு முன் முடிக்கப்பட்ட அல்லது முடிக்காமல் விடுபட்ட தொடர்புடைய செயல்கள் தவிர, ஒருங்கிணைந்த வரியை கணக்கிடுதல் மற்றும் தீர்வு செய்தல், நமூனாக்கள் அளித்தல் வரியினை செலுத்துதல் மற்றும் பதிவுகளுக்காகவும் வசதி ஏற்படுத்தப் பட்டுள்ள பொதுவான சரக்குகள் மற்றும் சேவைகள் வலைவாயில் டபிள்யூ டபிள்யூ டபிள்யூ.ஜிஎஸ்டி.ஜிஓவி.இன் (www.gst.gov.in) மூலமாகவும் மேலும் மின்னனு வழிப் பட்டியல் அளிப்பதற்கான பொதுவான சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மின்னனு வலைவாயில் டபிள்யூ டபிள்யூ டபிள்யூ.இவேபில்ஜிஎஸ்டி.ஜிஓவி. இன்( www.ewaybillgst.gov.in) என்பதனை தமிழ்நாடு ஆளுநரால் இதன் மூலம் அறிவிக்கப் படுகிறது.

விளக்கம்:-

(1) இந்த அறிவிக்கையின் நோக்கங்களுக்காக, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணைவமைவினால் நிருவகிக்கப்படும் வலைதளம் என்பது “டபிள்யூ டபிள்யூ டபிள்யூ.ஜிஎஸ்டி.ஜிஓவி.இன்'' (www.gst.gov.in) நிறுவனச் சட்டம் 2013 (மத்திய சட்டம் 18/2013) சட்டத்தின் பிரிவு–8–ன் விதிமுறைகளின் கீழ் ஒருங்கிணைத்தமைந்த நிறுவனம் ; மற்றும்

(2) இந்த அறிவிக்கையின் நோக்கங்களுக்காக ‘‘டபிள்யூ டபிள்யூ டபிள்யூ.இவேபில்ஜிஎஸ்டி. ஜிஓவி,இன்'' என்பதற்கு இந்திய அரசாங்கத்தின் மின்னனு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் தேசிய தகவல் நிலையத்தால் நிருவகிக்கப்படும் வலைதளம்.

2 . 2018 ஜனவரி 16 –ஆம் தேதிமுதல் நடைமுறைக்கு வருவதாக இந்த அறிவிக்கையானது கருதப்படுகிறது

முனைவர்.ச.சந்திரமௌலி,
(அரசின் கூடுதல் தலைமை செயலாளர்) (முகூபொ).